முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**33 T I**

දෙවන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term Examination 2024

ඉතිහාසය I
வரலாறு I
History I

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

පැයයි
ஒரு மணித்தியாலம்
One Hours

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## வரலாறு I

**கவனிக்க :**

1. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. மகாவம்சத்தின் சில பகுதிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் எழுதப்பட்ட டீகாவ எனும் உரைநூல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. தீபவம்சம்
2. உத்தர விஹார அட்டகதா
3. வம்சத்து பகாசினி
4. வினய அட்டகதா

02. பொலன்னறுவை யுகத்தில் பயன்படுத்திய நாணய வகைகளில் ஒன்று யாது?
1. கஹபண
2. வெள்ளி நாணயம்
3. இலஷ்மி உருவம் பதித்த நாணயம்
4. கம்பமஸ்ஸ

03. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளி வாழிடம் ஒன்று,
1. பெல்லம் பெதிபெலஸ்ஸ
2. தியவன்னா
3. பொத்தான
4. மினிஹாகல்கந்த

04. புராதன காலத்தில் குடும்பம் எனும் சொல்லுக்கு வழங்கப்பட்ட கருத்து யாது?
1. குலம்
2. குர்ஹபதி
3. கமிக
4. குடின்

05. இன்று பாராளுமன்றம் புரிவதைப் போல அன்று சட்டங்களை வகுக்கப் பயன்படுத்தப்பட்டது யாது?
1. சபாவ
2. அரச சபை
3. சாம்ய
4. மஹலே

06. புராதன கால நீர்ப்பாசனத்துடன் சம்பந்தப்பட்ட சொல் ஒன்று அல்லாதது.
1. கலிங்கல் தொட்டி
2. வெளிவான்
3. நாற்பக்கத் தொட்டி
4. அலை தாங்கி

07. புராதன கிராமமொன்றில் வாழும் ஏழைக் குடியானவன் அடுத்த போகத்தில் தருவதாகக் கூறிய வாக்குறுதியின் பேரில் கமிகவிடம் நெல் மூட்டையொன்றைக் கடனாகப் பெற்றுக் கொண்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ள மூலாதாரம் எது?
1. சமந்தபாசாதிகா
2. ஜாதக அட்டகதா
3. சத்தர்மலங்காரய
4. சஹஸ்தவஸ்துப் பிரகனய

08. புராதன காலத்தில் கால்வாய்களிலிருந்து மீன் பிடித்தலுக்காக அறவிடப்பட்ட வரி எது?
1. தக்கபதி
2. போஜகபதி
3. மதர மஞ்சக்க
4. தண்டப்பணம்



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

09. பின்வரும் கூற்றுக்களுள் பருமக சம்பந்தமான மிகச் சரியான கூற்று எது?
1. குளந்தொகுதியைச் சேர்ந்த அனைத்து கிராமங்களையும் பரிபாலித்தல்.
2. கிராமக் குளங்களை நிர்வகித்தல்.
3. கிராமத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்தல்.
4. குளத்திலிருந்து நீரை விநியோகித்தல்.

10. வரலாற்றுக்கால சமுதாய அமைப்பில் கீழ் மட்டத்தில் இருந்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
1. மெய்க்காப்பாளர் 2. குடின் 3. தண்ட நாயக்க 4. அடிமைகள்

11. புராதன சமுகத்தில் சேனையைக் குறிப்பிடப் பயன்படுத்திய சொற்களைத் தெரிவு செய்க.
1.பிடபிம், செஹென், சேன 2. செஹென், மயானம், பெல
3.மயானம், சேன, செஹென் 4. பிடபிம், கெத, செஹென்

12. சர்வதேச வர்த்தகமானது இந்து சமுத்திரத்தின் கிழக்குப் பிரதேசத்திற்கு நகர்த்தப்பட்டதனால் தோற்றம் பெற்ற இராசதானி எது?
1. அநுராதபுரம் 2. தம்பதெனியா 3. பொலன்னறுவை 4. குருநாகல்

13. 'ரன்தெவிசி கலந்த' என எழுதப்பட்டிருந்த தங்க உலோகத்துண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்ட இடம் யாது?
1. ஜேதவனராமய 2. அபயகிரி 3. வெஸ்ஸகிரி 4. சீகிரியா

14. புராதன காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய அளவை முறைகள் யாவை?
1. ஆங்குல, வியத்த, குஞ்சா, மாசக்க 2. ஆங்குல, கவ்வ, பரமாணு, தரண
3. கிரிய, ஹவஜ, மாசக்க, குஞ்சா 4. கவ்வ, யெதுன, வியத்த, ஆங்குல

15. மூலாதாரங்களில் பண்ணசாலா என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல்,
1. பிக்குக்களின் தியான மண்டபம் ஆகும்.
2. பிக்குமார் தர்ம போதனை நடத்திய இடமாகும்.
3. பிக்குமார் வாழ்வதற்கு கட்டப்பட்ட ஓலைக் குடிசையாகும்.
4. பிக்குமார் அன்னதானத்தைப் பெற்றுக் கொண்ட இடமாகும்.

16. புராதன கட்டடக்கலை நிர்மாணத்தின் போது கழிவுகளை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் யாது?
1. ஆலாஹனா பிரிவெனா 2. இசுறுமுனிய விகாரை
3. ரன்மசு பூங்கா 4. கல்விகாரை

• பின்வரும் அட்டவணையில் உள்ள தகவல்களைக் கொண்டு 17ஆம் வினாவுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A – உழுந்து கஞ்சி | C – எம்புல் கெந்த | E – காடிப்புளிப்பு |
| B - இலைக்கஞ்சி | D – நீர்க்கஞ்சி | F – யவாகு |

17. தற்போது உப்புக்கஞ்சி என அழைக்கப்படும் உணவானது அக்காலத்தில் நோயாளர்களுக்குத் தயாரித்து வழங்கப்பட்ட கஞ்சி வகைகளாகும். அவற்றை மேலுள்ள அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.
1. ADF 2. BDF 3. ACE 4. BCE

18. புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்று.
1. சிம்மாசன உரிமையற்றுப் போதல்.
2. ஜோதிய என்பவரின் கிளர்ச்சி
3. வர்த்தகமும் போக்குவரத்தும் தடைபட்டமை
4. ஐரோப்பிய இனத்தவர் நிர்வாக நடிவடிக்கைகளில் ஈடுபட்டமை.

19. கம்பளை இராசதானிக் காலத்தில் அரசுரிமை கிட்டிய விதம் யாது?
1. தந்தையிடமிருந்து மகனுக்கு 2. சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு
3. அரசனின் மனைவியின் சகோதரனுக்கு 4. தாய்வழி அரசுரிமை முறை

20. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. யாழ்ப்பாண இராச்சியத்திற்கு இயற்கை பாதுகாப்பு கிடைக்கப் பெறல்.
2. விஜய கூழங்கை எனும் ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தின் ஆரம்ப ஆட்சியாளன் ஆவான்.
3. காலிங்கராயர் எனும் சேனாதிபதி யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தல்.
4. யாழ்ப்பாணத்திற்கு நிரந்தர பாதுகாப்புப்படையொன்று காணப்படல்.

21. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் முதலில் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இராச்சியம் எது?
1. கண்டி இராச்சியம் 2. கோட்டே இராச்சியம்
3. யாழ்ப்பாண இராச்சியம் 4. சீதாவக்கை இராச்சியம்


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

22. போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்த போது ஆசியாவில் வர்த்தக ஏக போக உரிமை கொண்டிருந்த இனத்தவர் யார்?
1. ஒல்லாந்தர் 2. பிரான்சியர் 3. முஸ்லிம்கள் 4. ஆங்கிலேயர்

23. பிரதானிகளின் கட்டளைகளை, செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்குக் கொண்டு சென்றவர் யார்?
1. கடுபுள்ளே 2. திசாவைமார் 3. கோரளைமார் 4. விதானைமார்

24. பின்வரும் நிரல் i இல் உள்ளவற்றை நிரல் ii உடன் இணைக்கும் போது பெறப்படும் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| 1. முல்லேரியாப் போர் | A – சௌரத் மன்னன் |
| 2. தந்துரே போர் | B – ii ஆம் ராஜசிங்கன் |
| 3. ரன்தெனிவெல போர் | C – i ஆம் ராஜசிங்கன் |
| 4. கன்னொருவ போர் | D – i விமலதர்மசூரியன் |

1. CDAB 2. ACBD 3. DBCA 4. BACD

- பின்வரும் A – L வரையான தகவல்களைக் கொண்டு 25, 26, 27 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| நாடு | நபர் | கண்டுபிடிப்பு |
|---|---|---|
| A - இத்தாலி | E – ஜொஹேன்ஸ் கூடன்பேர்க் | I- நோய்களைக் குணமாக்கல் |
| B – சுவிஸ் இனத்தவர் | F – ஐசக் நியுட்டன் | J – தொலை நோக்கி |
| C – ஜேர்மன் | G – பெரசல்சஸ் | K – புவியீர்ப்புச் சக்தி |
| D - இங்கிலாந்து | H – கலிலியோ கலிலி | L – அச்சு இயந்திரம் |

25. அச்சு இயந்திரத்துடன் தொடர்புபட்டவைகளைத் தெரிவு செய்க.
1. AEJ 2. BGK 3. DEI 4. CEL

26. கலிலியோ கலிலி என்பவருடன் தொடர்புபட்டவைகளைத் தெரிவு செய்க.
1. BGI 2. DHI 3. AHJ 4. CHK

27. ஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தலுடன் தொடர்புபட்டவைகளைத் தெரிவு செய்க.
1. AEI 2. DFK 3. CGK 4. BHJ

- பின்வருவனவை பிரித்தானியர் காலத்துக்குரிய நிகழ்வுகளாகும். இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.
  A – ரொபட் அன்றூஸின் வருகை
  B – மலையகப் பிரதானிகளைத் தாக்குதல்.
  C – கியு பொயிட்டின் வருகை.
  D – அரசனொருவன் இல்லாமை பற்றிய மனவேதனை
  E – சட்டவாக்கக்கழகத்தில் முதன்முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை.
  F – பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமாதல்.

28. 1920 யாப்புச்சீர்திருத்தத்தை உள்ளடக்கிய விடைத்தொகுதி யாது?
1. E, A 2. A, B 3. E, F 4. F, D

29. 1818 ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சிக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை?
1. B, F 2. D, E 3. D, C 4. B, D

30. இராஜாத்தி இராஜசிங்க மன்னனின் காலத்தில் கண்டி இராச்சியத்துக்கு வருகை தந்த தூதுவர்கள் இருவர் யார்?
1. A, E 2. A, C 3. B, E 4. C, D

- பின்வரும் A – J வரையான தகவல்களைக் கொண்டு 31, 32 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| வருடம் | நபர் | முக்கியத்துவம் |
|---|---|---|
| A – 1873 | D – பொன்னம்பலம் இராமநாதன் | G - இலங்கைதேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் |
| B – 1912 | E – பொன்னம்பலம் அருணாச்சலம் | H - பாணந்துறை விவாதம் |
| C – 1919 | F மீதெட்டுவத்த குணாநந்ததேரர் | I – கல்வி கற்ற இலங்கையரின் முதலாவது பிரதிநிதி |


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

31. இலங்கை தேசிய சங்கத்துடன் தொடர்புடையவை.
1. CEG 2. AFH 3. BDI 4. CJG

32. குறுமக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புபட்டவை.
1. BEG 2. AFH 3. BDI 4. AFG

- பின்வரும் ABCD எனும் சோடிப்பதங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு 33 – 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1 – போக்குவரத்துத் துறை
2 – மெக்கடம் முறை
B – 1 – ஒல்கொட் அவர்களின் வருகை
2 – பாணந்துறை விவாதம்
C – 1 – விலங்குகள் இனப்பெருக்கம்
2 – நாய்வரி
D – 1 – பொப்பி மலர் வேலைத்திட்டம்
2 - சூரிய மலர் வேலைத்திட்டம்

33. முதலாவதன் விருத்திக்கு இரண்டாவது செல்வாக்குச் செலுத்திய சோடிப்பதம்.
1. A 2. B 3. C 4. D

34. இரண்டாவதன் காரணமாக முதலாவது இடம்பெற்றது என்பதனைக் குறிப்பிடும் சோடிப்பதம்.
1. A 2. B 3. C 4. D

35. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்புமற்ற சோடிப்பதம் எது?
1. A 2. B 3. C 4. D

36. பின்வரும் நிரல் i னை நிரல் ii உடன் இணைப்பதனூடாகப் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| 1. தேயிலை | A – அகலவத்தை |
| 2. தென்னை | B – தலவாக்கலை |
| 3. இறப்பர் | C – லுணுவில |

1. ABC 2. BCA 3. ACB 4. CAB

37. கைத்தொழில் புரட்சிக் காலத்தில் நில அடைப்பு முறையின் மூலம் ஏற்பட்டவை யாவை?
1. பாரிய நிலப்பிரதேசத்தை சிறு துண்டுகளாக்குதல்.
2. ஏழைகளின் காணிகளை பிரதானிகள் மூலம் கைப்பற்றிக் கொள்ளல்.
3. கிராமிய நிலங்களில் கைத்தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டமை.
4. சிறு நில உரிமையாளர்களிடம் காணப்பட்ட விவசாய நிலங்களை ஒன்றிணைத்து பாரிய விவசாயப் பண்ணைகளை உருவாக்குதல்.

38. பின்வரும் நிகழ்வுகளை கால ஒழுங்குபடுத்துவதனால் ஏற்படும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
A - இரட்டை ஆட்சி
B – மியுரன் குழு இலங்கை வருகை
C – கியு கடிதத்தை இலங்கையில் இருந்த ஒல்லாந்த ஆளுநரிடம் அனுப்புதல்.
D – கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடல்.
1. CBAD 2. ABCD 3. DBCA 4. BADC

39. 1848 கிளர்ச்சி காரணமாக முழுமையாக நீக்கிய வரி,
1. படகு வரி / நாய்வரி 2. கடை வரி / நாய்வரி
3. வண்டி வரி / கடை வரி 4. குதிரை வரி / உடல் வரி

40. தொடர்பாடல் துறையில் வேகமான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த தொலைக்காட்சி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
1. குக்லி மார்க்கோனி 2. அலெக்சாண்டர் கிரகம்பெல்
3. ரைட் சகோதரர்கள் 4. ஜோன் லொகி பெயார்ட்

(2x40=80 புள்ளி)


www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

ඉතිහාසය II
வரலாறு II
History II

**33 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

3වන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term1 Examination 2024

අමතර කියවීම් කාලය මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்
Additional Reading time 10 minutes

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :
- பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) i. கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் இலங்கைப்படத்திலும் ii கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

1. கற்பிட்டி, கலாஓயா, மாதுறு ஓயா நீர்த்தேக்கம், ஹுருளுவாவி, செங்கடகல, லங்காபடுன, ஊராத்தொட்டை, மட்டக்களப்பு, கொழும்பு, புந்தல, சீகிரியா, மகியங்கனை (12 புள்ளி)

2. கருங்கடல், கள்ளிக் கோட்டை, இத்தாலி, மலாக்கா நீரிணை, கொரியக்குடா நாடு, பாரசீக வளைகுடா (6 புள்ளி)

(ஆ) i. பின்வரும் ABCD என்பவற்றிற்கு ஒழுங்கு முறையில் விடையளிக்குக.

A – கி.மு 250 ஆம் ஆண்டளவில் நகரத்தின் பிரதான கட்டடக்கலைஞரைக் குறிப்பிடப் பயன்படுத்திய சொல் யாது?

B - இலங்கைக்கு முதலாவது வருகை தந்த போர்த்துக்கேயர் யார்?

C – 1848 கிளர்ச்சியின் பிரதான மத்திய நிலையம் யாது?

D – வெசாக் போயா தினத்தை அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்த நபர் யார்? (4 புள்ளி)

ii. பின்வரும் A, B உருக்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**A**



i. A எனும் உருவிலுள்ளது யாது?
ii. இதனை எழுதிய மன்னன் யார்?
iii. இதை யாருக்காக வழங்கப்பட்டது?
iv. இது எழுதப்பட்டுள்ள சாதனம் யாது?

(4 புள்ளி)

**B**



i. B உருவிலுள்ள நபர் யார்?
ii. இவர் அரசனாவதற்கு முன் அழைக்கப்பட்ட பெயர் யாது?
iii. இவர் எந்த அரச வம்சத்தைச் சேர்ந்தவர்?
iv. இவர் தலதா மாளிகையுடன் சேர்க்கப்பட்ட அலங்காரமான நிர்மாணம் எது? (4 புள்ளி)

PAST PAPERS WIKI



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

## பகுதி – ii

02. i. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளிகள் 3 தருக? (3 புள்ளி)

ii. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் உணவுக்காகப் பயன்படுத்திய தாவர உணவுகள் 2 உம் விலங்குணவுகள் 2 உம் தருக? (4 புள்ளி)

iii. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்வரலாற்றுக் காலத்தை வேறுபடுத்தும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

iv. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மைகளை மூன்று காரணிகளினூடாக விளக்குக. (6 புள்ளி)

03. i. அரசுக்கு முற்பட்ட காலத்து பின்வரும் அதிகாரிகள் கல்வெட்டுக்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை எழுதுக?

A – குடும்பத்தின் தலைவர்

B – கிராமத்தின் தலைவர்

C – குளத்தொகுதியொன்றின் தலைவர் (3 புள்ளி)

ii. பின்வரும் ஆட்சியாளர்கள் பற்றிய அரச கோட்பாடுகளை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

A – குட்டகர்ண அபய மன்னன்

B – மகாசேன மன்னன்

C – காசியப்ப மன்னன்

D - நிஸங்கமல்ல மன்னன்

(நரேஸ்வர, சக்கரவர்த்தி, மின்னேரிய தெய்வம், போதிசத்துவர், மலையின் அரசன்) (4 புள்ளி)

iii. வசப மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளி)

iv. புராதன காலத்திலிருந்தே இந்நாட்டின் வர்த்தகம் மிகவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டது என்பதற்குரிய மூன்று உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளி)

04. i. முன்வரலாற்றுக் காலத்தில் விஞ்ஞான அறிவைப் பறைசாற்றும் சந்தர்ப்பங்கள் மூன்றினைத் தருக? (3 புள்ளி)

ii. பின்வரும் A-D வரையான வினாக்களுக்குரிய விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

A – கற்பாறைகளிலிருந்து கற்பாலங்களைப் பிரித்தெடுப்பதற்கான தொழினுட்பம்

B – கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் கால்வாய்களை அமைப்பதில் ஈடுபட்ட அதிகாரி

C – உலர் வலயப் பிரதேசங்களில் குடிநீரின் குறிப்பிட்ட தரத்தைப் பேணிக்கொள்வதற்கு கட்டப்பட்ட கிணறு

D - இடி மின்னலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ருவன்வெலிசாயா தூபியில் பொருத்தப்பட்ட பகுதி.

(அலகொலவெவ, அடிக, அமுக்கப் பிரயோகம், பதகு, ஊராகெட கிணறு, வஜ்ர சும்பட்ட) (4 புள்ளி)

iii. பண்டைய இலங்கையில் இரும்பைப் பிரித்தெடுத்தமைக்கான சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு இங்கு இரும்பு பிரித்தெடுத்தமை பற்றிய விளக்கத்தையும் குறிப்பிடுக. (5 புள்ளி)

iv. பண்டைய கால ஆட்சியாளர்கள் சுற்றாடலைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

05. i. கண்டி இராச்சியத்திற்கு வழங்கப்பட்ட மூன்று பெயர்களைத் தருக? (3 புள்ளி)

ii. கண்டி இராச்சிய காலத்தில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் நான்கினைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

iii. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் அரசாட்சியை நிலைநாட்டிக் கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

iv. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பில் காணப்பட்ட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

06. i. ஆங்கிலேயர் இந்நாட்டை கைப்பற்றிக் கொள்வதற்கு முன்னர் இலங்கை வந்த அவர்களுடைய தூதுவர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii. மியுறன் குழுவின் ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

iii. 1903 இல் மலையக ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணிகள் இரண்டினை விளக்குக (5 புள்ளி)

iv. 1818 ஊவா வெல்லஸ்ஸக் கிளர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

07. i. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் செயற்பட்ட மிசனரிகள் மூன்று தருக? (3 புள்ளி)

ii. ஹென்றி ஸ்டில் ஒல்கொட் அவர்கள் ஆற்றிய சேவைகள் நான்கு தருக? (4 புள்ளி)

iii. 1833 கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

iv. டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

## பகுதி –iii

08. i. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்திற்குச் சேவையாற்றிய நூலாசிரியர்கள் மூவரைத் தருக? (3 புள்ளி)

ii. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டு தருக. (4 புள்ளி)

iii. மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞானத் துறை வளர்ச்சிக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

iv. மறுமலர்ச்சி இலங்கை மீது செலுத்திய தாக்கங்கள் மூன்றினை விளக்குக? (6 புள்ளி)

09. i. பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட மூன்று துறைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii. நிலக்கரியின் கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் 4 தருக. (4 புள்ளி)

iii. கைத்தொழில் புரட்சி பரவிய வேறு இரண்டு துறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

iv. கைத்தொழில் புரட்சியானது சமூகத்துறையில் ஏற்படுத்திய மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources